028

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
சட்டமாணிப் பட்டப்படிப்புத் திட்டம் - மட்டம் 04
இறுதிப் பரீட்சை – 2008
**LWU 2311** – ஒப்பந்தச் சட்டமும் முகவராண்மையும்
காலம்: மூன்று(03) மணித்தியாலங்கள்

திகதி: 25.03.2008 நேரம்: மு.ப 9.30 – ந.ப 12.30

பகுதி ஒன்றிலிருந்து ஒரு வினாவையும் பகுதி இரண்டிலிருந்து நான்கு வினாக்களையும் தெரிந்தெடுத்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை தருக.

தெளிவற்ற கையெழுத்துகளுக்கு புள்ளிகள் குறைக்கப்படும்.

## பகுதி I – முகவராண்மைச் சட்டம்

இப்பகுதியில் இருந்து ஒரு வினாவுக்கு மாத்திரம் விடை தருக.

01. (அ) முகவாண்மைச் சட்டத்தில் 'அவசியமான அதிகாரம்'(necessary authority) எனும் கோட்பாட்டினை தீர்க்கப்பட்ட வழக்குகளுடன் தொடர்புறுத்தி விளக்குக.

(ஆ) 'முரண்தடக்கல் கோட்பாட்டின்' (doctrine of estoppel) பொருளினை முகவராண்மைச் சட்டத்துடன் தொடர்புறுத்தி சுருக்கமாக ஆராய்க.

02. (அ) எந்த ஒப்படைக்கப்பட்ட அதிகாரமும் மேலும் ஒப்படைக்கப்பட முடியாது (*delegatus non potest delegare* ) எனும் மூதுரையை முகவராண்மைச் சட்டத்துடன் தொடர்புறுத்தி ஆராய்க.

(ஆ) ஹை-டெக் பெயின்ட்ஸ் லிமிடட் ஆனது குணதாச என்பவரை தமது பெயின்டுகளை விற்பனைசெய்வதற்கென, அவனால் செய்யப்படும் விற்பனையில் 10% இனை ஊதியமாகத் தருவதற்கான உடன்பாட்டின் பேரில் நியமித்தது. குணதாச ஹை-டெக் பெயின்ட்ஸ் லிமிடெட் அறியாவகையில் ஸ்கைலார்ஸ்க் இன்டஸ்ரீஸ் இற்கு பெயின்டுகளை விற்கின்றான். குணதாச் ஹை-டெக் பெயின்ட்ஸ் லிமிடட் இன் முகவர் என்பதனை ஸ்கைலார்ஸ்க் இன்டஸ்ரீஸ் அறிந்திருக்கவில்லை. ஸ்கைலார்ஸ்க் இன்டஸ்ரீஸ் இற்கு கடனாளியாக இருந்த குணதாச தாம் ஸ்கைலார்ஸ்க் இற்கு விற்பனை செய்த பெயின்டுகளுக்கு தமது கடனை பதிலீடு செய்கின்றான். ஸ்கைலார்ஸ்க் இன்டஸ்ரீஸ் பெயின்டுகளுக்கான பணத்தினைச் செலுத்தவில்லை.

ஹை-டெக் பெயின்ட்ஸ் லிமிடட் இற்கு ஆலோசனை வழங்குக.

03. (அ) "ஓர் முதல்வரின் மிக முக்கியமான கடமையானது முகவரால் வழங்கபப்பட்ட சேவைகளுக்கான கொடுப்பனவை செலுத்துதல் ஆகும்".

ஆராய்க.

(ஆ) தமது சொத்துக்களை ஈடுவைப்பதன் பேரில் பணத்தைத் தருவதற்கு விரும்புகின்ற ஓர் நபரை தேடுவதற்கு தமது முகவரான பியசேனவை சிரிசேன வேண்டினார். பியசேன தன்சார்பில் கவனிக்கத்தக்களவு முயற்சிகளை மேற்கொண்டு தேவையான பணத்தினை தருவதற்கு விரும்புகின்ற நபரான ஜயதிஸ்ஸவினை கண்டுபிடித்தார். பின்னர் சிரிசேனவிற்கு அச்சொத்துக்களுக்கு சரியான உரித்து இருக்கவில்லை என்பது கண்டுபிடிக்கப்பட்டது என்பதுடன் குறித்த பரிமாற்றல் இடம்பெறவில்லை.

பியசேனவிற்கு ஆலோசனை வழங்குக.

<u>பகுதி **II** - ஒப்பந்தச் சட்டம்</u>

இப்பகுதியிலிருந்து **நான்கு** வினாக்களுக்கு **மாத்திரம்** விடை தருக.

04. விளையாட்டுத்துறையில் நாட்டம் உள்ளவரான ரஞ்சன் கொழும்பில் இருந்து கண்டிக்கு நான்கு நாட்களில் நடந்து செல்லக்கூடிய எவருக்கும் ரூபா 25,000 வழங்குவதாக பத்திரிகை ஒன்றில் விளம்பரம் செய்தார். ஜனவரி 1ம் திகதி களனிப்பாலத்தில் இருந்து போட்டியில் பங்குபற்றுவோர் நடைபயணத்தினை ஆரம்பிக்க வேண்டியிருந்தது. பாரியளவிலானோர் நிர்ணயிக்கப்பட்ட நேரத்தில் செயல்பட முடியவில்லை ஆயின் ரொகான், மொகான், மற்றும் சொகான் ஆகியோர் மாத்திரமே நான்கு நாட்களில் நடைபயணத்தை பூர்த்தி செய்தனர். நடைபயணத்தின் இறுதி நாளில் எல்லா வெற்றி பெறக்கூடிய எல்லா நபர்களுக்கும் பணத்தினைச் செலுத்த தம்மிடம் போதிய பணம் இல்லாத காணத்தினால் தமது கொடை முனைவை மீளப்பெறுவதாக அறிவித்து இரண்டாவது பத்திரிகை விளம்பரத்தினை வெளியிட்டார்.

(அ) குறித்த விளம்பரத்தின் மீளப்பெறுகையை நடைபயணம் முடிவுற்றவுடனேயே ரொகான் அறிந்து கொண்டார்.

(ஆ) பாதையில் மொகான் நடைபயணத்தை மேற்கொண்டு இருக்கும் போது ஒரு பத்திரிகை நிருபர் மூலம் குறித்த கொடைமுனைவு மீளப் பெறப்பட்டதாக அறியப்பெற்றாலும் அதனை நம்பாது குறித்த நடைபயணத்தினை முழுமையாக நடந்து முடிக்கின்றார்.

(இ) சொகான் குறித்த கொடைமுனைவினைப்பற்றி எதனையும் அறிந்திருக்கவில்லை என்பதுடன் இந்த போட்டியில் தமது தேக இயலுமையை பரீட்சிக்கும் பொருட்டு பங்குபற்றினார்.

ரொகான், மொகான், சொகான் ஆகியோர் பரிசினைக் கோர முடியுமா?

ஆராய்க.

05. சுனில் என்டர்பிரைசஸ் லிமிட்டட் இல் பங்குகளை முதலீடு செய்வதன் பொருத்தப்பாட்டினை வினவும்பொருட்டு ஹென்ரி என்பவர், டேவிட் எனும் பங்குத்தரகரை அணுகினார். டேவிட் அதற்கு மறுமொழி கூறுகையில் “நீர் அதனைக்

கட்டாயமாகச் செய், அது தமது தொழிற்பாடுகளை தொடர்ச்சியாக முன்னேற்றுகின்ற மிகவும் உறுதியான கம்பனி. எல்லோராலும் நன்கு அறியப்பெற்ற கம்பனி பணிப்பாளரான நோர்டன் டி அல்விஸ் என்பவரும் அக்கம்பனியின் பணிப்பாளர்களில் ஒருவர், மற்றும், நான் அந்தக் கம்பனியில் 10,000 பங்குகளை சொந்தமாக வைத்திருக்கிறேன், அவற்றை உமக்கு விற்பனை செய்ய ஆயத்தமாக உள்ளேன்'' என்றார். ஹென்றி டேவிட் இன் பங்குகளை நூறாயிரம் ரூபாய்க்கு கொள்வனவு செய்தார். இரு மாதங்களுக்கு பின்னர், கம்பனியானது தீர்த்துக்கட்டலுக்குட்பட்டது. தற்போது பங்குகள் பெறுமதியற்றனவாகும். மேலும் பின்வருவனவும் வெளிப்பட்டன.

(அ) டேவிட்டினுடைய கூற்றுக்குப்பிறகு இரண்டு வாரங்களில் நோர்டன் டி அல்விஸ் பணிப்பாளர் குழுமத்தில் இருந்து விலகினார், மற்றும்;

(ஆ) கம்பனியின் முன்னேற்றம் தொடர்பான டேவிட் இன் கூற்றானது ஓர் வர்த்தகப் பத்திரிகையில் காணப்பட்ட கட்டுரை ஒன்றினை அடிப்படையாகக் கொண்டமைந்தது. ஆயினும் உண்மையிலேயே அந்தக் கட்டுரை சன்ஹில் என்டர்பிரைசஸ் இனைக்குறிப்பதாக இருந்த போதிலும் அச்சுப்பிழை காரணமாக சன்ஹில் என்டர்பிரைஸ் லிமிடெட் என வெளிவந்திருந்தது.

ஹென்றிக்கு ஆலோசனை வழங்குக.

06. (அ) ''விலக்களிப்பு வாசகத்தின் பரப்பெல்லையை மட்டுப்படுத்துவதற்கு நீதிமன்றங்களாவன சிறப்பான முறையில் மிகவும் கவனமாகவும் மற்றும் சுதந்திரமாகவும் செயற்படுவதற்கு ஆயத்தமாக உள்ளன''

கருத்துரைக்க.

(ஆ) அக்ரிகோலா கம்பனியானது ரஞ்சன் என்பவருக்கு குறித்தளவான உருளைக்கிழங்கு விதைகளை ரூபா 50,000 இற்கு வினியோகிக்க உடன்பட்டது. அக்ரிகோலா கம்பனிக்கும் ரஞ்சனிற்கும் இடையிலான அவ் ஒப்பந்தத்தில் கம்பனியின் கடப்பாடுகளை மட்டுப்படுத்துவதாக காணப்பட்ட வாசகமானது; உருளைக்கிழங்கு விதைகள் பழுதடைந்திருக்கும் சந்தர்ப்பத்தினை நிரூபிக்கும் பட்சத்தில் பழுதடைந்த விதைகள் மாற்றீடு செய்தல் அல்லது கொள்வனவு விலையை மீளச்செலுத்துதல் மற்றும் ஏனைய எந்தவிதமான பொறுப்புகளிலும் இருந்தும் கம்பனி விடுபாடுடையது என்ற வகையில் அமைந்திருந்தது. கம்பனியின் தொழிலாளர்களின் கவனயீனம் காரணமாக வினியோகிக்கப்பட்ட விதைகள் உடன்பாட்டின் மீதமைந்த வகையினதாக இல்லாதிருந்ததுடன் பயன்படுத்த முடியாக வகையிலும் காணப்பட்டது. ரஞ்சன் மூன்று ஏக்கர் நிலத்தில் ஒருவருட காலத்தில் தாம் பயிர் செய்யக்கருதியவற்றின் விளைச்சலை இழந்தார் மற்றும் அக்ரிகோலா கம்பனியிடம் இருந்து இழப்பீட்டினை கோருகின்றார்.
ஆராய்க.

07. (அ) ஒப்பந்தச்சட்டத்தில் உள்ள நிலைகுலைவுக் கோட்பாட்டின் பரப்பெல்லை மற்றும் பிரயோகம் ஆகியவற்றுடன் தொடர்புடைய விதிகளை சுருக்கமாக ஆராய்க.

(ஆ) சமன் தனது சுற்றுலா விடுதியை சுரேஷ் மற்றும் அவரது குடும்பத்திற்கு ஒரு கிழமைக்கு 15,000 ரூபாய் என்ற அடிப்படையில் பயன்படுத்த உடன்படுகின்றார். சுரேஸ் ரூபா 5000/= பணத்தினை செலுத்துகிறார். விடுமுறை ஆரம்பிப்பதற்கு ஒரு கிழமைக்கு முன்னதாக மிகுதித்தொகை செலுத்தக்கூடியதாக இருந்தது. விடுமுறை ஆரம்பிக்கப்பட்டு இரண்டு நாட்களுக்கு முன்னதாக சுரேஷினுடைய பிள்ளைகள் பொட்டலம்மை (mumps) இனால் பாதிக்கப்பட்டனர். மேலும் விடுமுறை ரத்து செய்யப்பட்டதாக குறிப்பிட்டு மருத்துவச்சான்றிதழை சமனுக்கு சுரேஷ் அனுப்பினார். இதற்கு சமன் வருத்தம் தெரிவித்தாலும் மிகுதிப்பணத்தினை வேண்டி நிற்கின்றார்.

சுரேஷ் இற்கு ஆலோசனை வழங்குக.

08. "குற்றமற்ற திறம் குறித்த ஒப்பந்தத்தினை ஒப்பந்த முறிவின் மூலம் முடிவுற்றதாக கருதுவதற்கு தெரிவு செய்தாலும் அல்லது இல்லாவிட்டாலும் அக் குறித்த முறிவினால் ஏற்படும் இழப்பினை மீளப்பெறுவதற்கு அவருக்கு உரிமை உண்டு. ஆனால் , அவரால் அனுபவிக்கப்பட்ட நட்டஈட்டு உரித்துடமையின் அளவானது சேதச் சேய்மை கோட்பாட்டினைச் சார்ந்துள்ள விதிகளிலேயே தங்கியுள்ளது"

தீர்க்கப்பட்ட வழக்குகளுடன் தொடர்புறுத்தி மேற்கண்ட கூற்றை ஆராய்க.

09. (அ) "பொது விதியின் அடிப்படையில் ஒரு கொடை வழங்குணரின் வாழும் காலப்பகுதியில் *(Donation intervivos)* செய்த கொடையானது மீளப்பெற முடியாததாகும் என்ற போதிலும் கொடை வழங்குனர், விசேட சந்தர்ப்பங்களில் நீதிமன்றத்தின் தண்டனை கட்டளையுடன் குறித்த கொடையை இல்லா தொழிக்கலாம்"

ஆராய்க.

(ஆ) "சாவேதுக்கொடையானது *(donatio morits causa)* ஒப்பந்தம் மற்றும் மரபுரிமை ஆகிய இரு பண்பினையும் உடைய விசேட வகையான கொடையாகும்".

ஆராய்க.

10. பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டினைப்பற்றி குறிப்பெழுதுக.

அ) வலுக்கட்டாயம் (duress)
(ஆ) தகாத செல்வாக்கு (undue influence)
(இ) பராயமடையாதோரின், உதவிபெறாத ஒப்பந்தங்கள்(unassisted contracts of minors)
(ஈ) புதுக்கல் (novation)
(உ) தீர்த்துக்கட்டிய நட்டங்களும் தண்டமும். (liquidated damages and panelty)

(பதிப்புரிமையுடையது)